Click Here to Learn more : https://bit.ly/3xNiQ28

# TNPSC CCSE IV Group IV & VAO

மதிப்பெண் : 300
நேரம் : 3 மணி

## ஒரிஜினல் வினாத்தாள் 2019

நாள் : 01. 09. 2019

## பொதுத்தமிழ்

1. பின்வரும் தொடரிலுள்ள நிகழ்கால வினைமுற்றைத் தேர்வு செய்க.
   A) பழுத்த பழம் B) பழுக்கும் பழம்
   C) பழுக்கின்றது D) பழங்கள் பழுத்தன

**விளக்கம் :** விடை (C)

| | | |
|---|---|---|
| பழுத்த பழம் | – | இறந்தகால பெயரெச்சம் |
| பழுக்கும் பழம் | – | எதிர்கால பெயரெச்சம் |
| பழுக்கின்றது | – | நிகழ்கால வினைமுற்று |
| பழங்கள் பழுத்தன | – | இறந்தகால வினைமுற்று |

2. படி என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினையெச்சத்தை உருவாக்குக.
   A) படித்து B) படித்தல்
   C) படித்த D) பாடுதல்

**விளக்கம் :** விடை (A)

| | | | |
|---|---|---|---|
| படித்து | – வினையெச்சம் | படித்தல் | – தொழிற்பெயர் |
| படித்த | – பெயரெச்சம் | பாடுதல் | – தொழிற்பெயர் |

3. "கல்" என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக.
   A) கற்றல் B) கற்பனை
   C) கண்டான் D) கல்லை விடை (A)

4. "இயல்பானது" வேர்ச்சொல்லறிக.
   A) இயல் B) இயல்பு
   C) இயைபு D) இய விடை (B)

5. 'ஏ' என்ற ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள்
   A) தலைவன் B) நெருப்பு
   C) அரண் D) அம்பு

**விளக்கம் :** விடை (D)

| | |
|---|---|
| ஐ | தலைவன் |
| தீ | நெருப்பு |
| ஏ | அம்பு |

6. "வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி" என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றியவர் யார் ?
   A) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
   B) பெருங்குன்று கிழார்
   C) பெருநாவலர்
   D) பாவேந்தர் பாரதிதாசன்

**விளக்கம் :** விடை (A)

3000 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இலக்கிய வளமிக்க மொழி தமிழ் மொழியாகும். – இதனை "வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் பறைசாற்றியுள்ளார்.

7. 'துரை மாணிக்கம்' என்பது இவரின் இயற்பெயர்
   A) கவிஞர் சுரதா
   B) கவிஞர் மீரான்
   C) பாரதிதாசன்
   D) பெருஞ்சித்திரனார்

**விளக்கம் :** விடை (D)

| கவிஞர் | இயற்பெயர் |
|---|---|
| சுரதா | தி. இராசகோபாலன் |
| பாரதிதாசன் | கனக சுப்புரத்தினம் |
| பெருஞ்சித்திரனார் | துரை. மாணிக்கம் |

8. திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் யார் ?
   A) சி.வை. தாமோதரம்
   B) வ. சுப. மாணிக்கம்
   C) தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்
   D) சீனி. வேங்கடசாமி

**விளக்கம் :** விடை (C)

**தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்**
இவர் கால்டுவெல்லுக்கு அடுத்தபடியாக திராவிட மொழிகள் ஒப்பியல் ஆய்வினை வளர்த்தவர்.

**சி.வை. தாமோதரனார்**
இவர், பல அரிய தமிழ்நூல்களை உரையுடன் வெளியிட்டார். 'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்பட்டவர்.

**சீனி. வேங்கடசாமி**
இவர், தமிழ் மொழியில் மறந்துபோன, மறைந்துபோன அளவு கடந்த செய்திகளை தம் ஆய்வின் மூலம் உலகறியச் செய்தவர்.

9. பரிதிமாற்கலைஞர் நடத்தி வந்த ஞானபோதினி என்னும் இதழைத் தொடங்கி வைத்தவர் யார் ?
   A) மு.சி. பூர்ணலிங்கம் B) தெ.பொ. மீனாட்சி சுந்தரம்
   C) கே.வி. சுப்பையா D) எல்.வி. இராமசுவாமி

**விளக்கம் :** விடை (A)

19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் குறிப்பிடத் தக்கவர் பரிதிமாற்கலைஞர். மு.சி. பூர்ணலிங்கம் என்பவர் தொடங்கிய **'ஞானபோதினி'** என்னும் இதழை பரிதிமாற்கலைஞர் தொடர்ந்து நடத்தி வந்தார்.

10. பெரியபுராணத்திற்கு சேக்கிழாரிட்ட பெயர்
   A) சிவதொண்டர் புராணம் B) சிவனடியார் புராணம்
   C) திருத்தொண்டர் புராணம் D) தொண்டர்சீர் புராணம்

**விளக்கம் :** விடை (C)

செயற்கரிய செயல்களைச் செய்து பெருமை பெற்ற 63 சிவனடியார்களின் வரலாற்றையும் தொகையடியார் ஒன்பது பேரின் வரலாற்றையும் கூறும் பெரிய புராணத்தை சேக்கிழார் இயற்றினார். இந்நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் ஆகும். இந்நூலின் பெருமை கருதி பின்னாளில் இது 'பெரியபுராணம்' என அழைக்கப்பெற்றது.

11. சுந்தரம்பிள்ளையைப் போற்று முகமாகத் தமிழக அரசு நிறுவியது யாது ?
   A) பல்கலைக்கழகம் B) அரசவைக் கவிஞர் பணி
   C) அறக்கட்டளை D) பேராசிரியர் பணி

**விளக்கம் :** விடை (A)

பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் மனோன்மணீயம் என்ற காப்பியத்தை இயற்றியவர். இவர் இயற்றிய 'நீராருங்கடலுடுத்த' என்ற பாடல் தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது.



Click Here to Learn more : https://bit.ly/3xNiQ28

Click Here to Learn more : https://bit.ly/3xNiQ28



இவரைப் போற்றும் விதமாக தமிழக அரசு 'மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தை' 1990–இல் திருநெல்வேலியில் உருவாக்கியது.

12. **பொருளறிந்து பொருத்துக.**

a) தடக்கர் — 1. கரடி
b) எண்கு — 2. காட்சி
c) வள்உகிர் — 3. பெரிய யானை
d) தெரிசனம் — 4. கூர்மையான நகம்

**குறியீடுகள் :**

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 1 | 4 | 3 | 2 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 1 | 3 | 2 | 4 |

**விளக்கம் :** **விடை (A)**

| சொல் | பொருள் | சொல் | பொருள் |
|---|---|---|---|
| தடக்கரி | பெரிய யானை | வள்உகிர் | கூர்மையான நகம் |
| எண்கு | கரடி | தெரிசனம் | காட்சி |

மேற்கண்ட சொற்கள் சீறாப்புராணம் விலாதத்துக் காண்டம் – புலி வசனித்த படலத்தில் அமைந்துள்ளன.

*ஒரிஜினல் வினாத்தாளில் '**தடக்கரி**' என்பது '**தடக்கர்**' என்று தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

13. **அவன் சித்திரையான் – எவ்வகை பெயர்**

A) குணப் பெயர் B) இடப் பெயர்
C) காலப் பெயர் D) தொழிற் பெயர் **விடை (C)**

14. **வேற்றுமை உருபை இணைத்து தொடரை ஒழுங்குபடுத்தி எழுதுக :**

A) மாணவர்கள் உட்கார வட்டமாகச் செய்க
B) மாணவர்களை வட்டமாக உட்காரச் செய்க
C) மாணவர்களை உட்கார வட்டமாகச் செய்க
D) மாணவர்களை செய்க வட்டமாக உட்கார **விடை (B)**

15. **சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்**

A) மாலை மீது மலையின் மழை பெய்தது நேற்று
B) மலையின் மாலை மீது நேற்று பெய்தது மழை
C) நேற்று மாலை மலையின் மீது மழை பெய்தது
D) பெய்தது மழை மலையின் மீது நேற்று மாலை **விடை (C)**

16. **அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்து எழுதுக.**

A) கொன்றை, கெண்டை, கண், கீரன், காடை
B) கெண்டை, கீரன், கொன்றை, காடை, கண்
C) கண், காடை, கீரன், கெண்டை, கொன்றை
D) கண், கீரன், காடை, கொன்றை, கெண்டை **விடை (C)**

17. **காடுகளில் வாழ்ந்த மக்கள் விலங்கின் பெயர் கொண்டு அமைத்த ஊரின் பெயர் என்ன?**

A) ஆட்டையாம்பட்டி B) வேப்பனேரி
C) புளியம்பட்டி D) புளியங்குடி

**விளக்கம் :** **விடை (A)**

ஏனைய மூன்றும், மரங்களின் பெயர் கொண்டு அமைந்த ஊர்களின் பெயர்களாகும்.

18. **இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி யார் ?**

A) அம்பேத்கர் B) இராஜாஜி
C) அண்ணா D) காமராசர் **விடை (A)**

19. **அறிஞர் அண்ணாவின் கவிதைகள் 'தமிழ்ப்பீடம்' என்னும் இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆண்டு எது?**

A) 2005 B) 2004
C) 2003 D) 2006

**விளக்கம் :** **விடை (A)**

அறிஞர் அண்ணாவின் கவிதைகள் '**தமிழ்ப்பீடம்**' என்ற இதழில் 1.09.2005 அன்று வெளிவந்தன. இந்த மாத இதழின் ஆசிரியராக இருந்தவர் உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் மகன் கல்லாடன் ஆவார்.

20. **தமிழில் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டவர்**

A) ஜி.யு. போப் B) வீரமாமுனிவர்
C) H.A. கிருஷ்ணப்பிள்ளை D) ரா.பி. சேதுபிள்ளை

**விளக்கம் :** **விடை (B)**

தமிழ் மொழியின் முதல் அகராதி நூல் 'சதுரகராதி' ஆகும். இந்நூலை எழுதியவர் **வீரமாமுனிவர்** ஆவார். 'சதுர்' என்றால் நான்கு என்பது பொருளாகும். இதிலுள்ள நான்கு பிரிவுகள் **பெயர் அகராதி, பொருள் அகராதி, தொடை அகராதி, தொகை அகராதி.**

21. **'தபோலி' என்னும் சிற்றூர் எந்த மாநிலத்தில் உள்ளது.**

A) மராட்டிய மாநிலம் B) குஜராத் மாநிலம்
C) தமிழ்நாடு D) கர்நாடகம்

**விளக்கம் :** **விடை (A)**

தபோலி என்னும் சிற்றூர் மராட்டிய மாநிலம் கொங்கண் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த ஊரில்தான் அம்பேத்கர் ஆரம்பக் கல்வியைக் கற்றார்.

22. **'காவடிச் சிந்தின் தந்தை' என அழைக்கப்படுபவர் ........**

A) பாரதியார்
B) சென்னிகுளம் அண்ணாமலையார்
C) அருணகிரியார்
D) விளம்பி நாகனார்

**விளக்கம் :** **விடை (B)**

தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால் '**காவடிச் சிந்தின் தந்தை**' என்று சென்னிகுளம் அண்ணாமலையார் அழைக்கப்பட்டார். இவரது காலம் 19–ஆம் நூற்றாண்டு ஆகும்.

23. **கலிங்கத்துப்பரணி – நூலில் அமைந்துள்ள தாழிசைகள் எண்ணிக்கை யாது ?**

A) 596 B) 599
C) 593 D) 597

**விளக்கம் :** **விடை (B)**

**கலிங்கத்துப்பரணி :** இந்நூல் பரணி இலக்கியங்களுள் முதலில் தோன்றியதாகும். இந்நூலை இயற்றியவர் ஜெயங்கொண்டார். இந்நூலில் 599 தாழிசைகள் உள்ளன.

24. **"நாயின் வாயினீர் தன்னை நீரெனா**
**நவ்வி நாவினால் நக்கி விக்குமே"**
**– இவ்வரிகள் இடம்பெற்ற நூல்**

A) வங்கத்துப் பரணி B) திராவிடத்துப் பரணி
C) கலிங்கத்துப் பரணி D) தக்கயாகப் பரணி

**விளக்கம் :** **விடை (C)**

**கலங்கத்துப்பரணி**

**தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்**
**சிந்தை கூரவாய் வெந்து லர்ந்துசெந்**
**நாயின் வாயினீர் தன்னை நீரெனா**
**நவ்வி நாவினால் நக்கி விக்குமே**
**– ஜெயங்கொண்டார்**

**பொருளுரை :** பாலை நிலத்தில் கடும் வெப்பம் நிலவியதால் மானின் வாய் வெந்து உலர்ந்தது. நெருப்பிலிருந்து நீர் கிடைத்தாலும் குடித்துவிடலாம் என்ற எண்ணம் தோன்றுமளவுக்குத் தாகத்தால் தவித்தது. செந்நாயின் வாயிலிருந்து வடியும் உமிழ்நீரைக் கூடக் குடிக்க முயன்று நக்கி, விக்கி நின்றது. (செந்நாய்க்கு மான் அஞ்சி ஓடும் எனினும் பாலைநில வெம்மை மிகுதியால் தத்தம் இயல்பை மறந்து களைத்திருந்தன என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்).



Click Here to Learn more : https://bit.ly/3xNiQ28

Click Here to Learn more : https://bit.ly/3xNiQ28



**25. அதியமானின் தூதராக ஔவை சென்றதைக் கூறும் நூல் எது?**
A) பதிற்றுப்பத்து B) பரிபாடல்
C) புறநானூறு D) ஆத்திச்சூடி

**விளக்கம் :** விடை (C)

தொண்டை நாட்டை ஆண்டு வந்த தொண்டைமான் என்ற குறுநில மன்னன் அதியமான் மீது பகைமை கொண்டான். அதியமானோடு போர் புரிய எண்ணினான். அதை அறிந்த அதியமான் ஔவையாரை அவனிடம் தூதுவராக அனுப்பினான். தொண்டைமான் தன் படைப் பெருமையை ஔவையாருக்குக் காட்ட எண்ணித் தன் படைக்கலக் கொட்டிலுக்கு அவரை அழைத்துச் சென்றான். அவன் எண்ணத்தை அறிந்த ஔவையார் தொண்டைமானிடம் கூறியது, புறநானூறில் 95–ஆவது பாடலாக இடம்பெற்றுள்ளது.

**"இவ்வேலி பீலி அணிந்து மாலை சூட்டிக்**
**கண் திரள் நோன் காழ் திருத்தி நெய் அணிந்து**
**கடி உடை வியன் நகர், அவ்வே அவ்வே**
**பகைவர்க் குத்திக் கோடு நுதி சிதைந்து**
**கொல் துறைக் குற்றில மாதோ'' – ஔவையார்**

**பொருளுரை :** இங்கே இருக்கும் போர்க்கருவிகள் அனைத்தும் மயில் இறகு அணியப்பட்டு, பூமாலை சூடப்பட்டுத் திரண்ட வலிமையான காம்புகள் அழகுற செய்யப்பட்டு, நெய் பூசப்பட்டுக் காவலுடைய பெரிய அரண்மனையில் உள்ளன. அங்கே அதியமான் அரண்மனையில் இருப்பவையோ, பகைவரைக் குத்தியதால் வேலின் பக்கமும் நுனியும் சிதைந்து, எப்பொழுதும் கொல்லனின் பணியிடமாகிய சிறிய பட்டறையில் கொட்டிக் கிடக்கின்றன என்று கூறினார்.

**பாடலின் கருத்து :** தொண்டைமான் போருக்கு செல்லாததால் அவனுடைய போர்க் கருவிகள் புதிதாக உள்ளன. அடிக்கடி போருக்குச் சென்று வெற்றி பெறுவதால் அதியமானின் கருவிகள் பழுதடைந்துள்ளன.

**26. தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க.**
A) அப்பூதி அடிகள் நான்மறை கற்கவில்லை.
B) அப்பூதி அடிகள் நான்மறை கற்றார்.
C) அப்பூதி அடிகள் நான்மறை கற்றாரா?
D) அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார்.

**விளக்கம் :** விடை (B)

அப்பூதி அடிகள் நான்மறை கற்கவில்லை – எதிர்மறை வாக்கியம்
**அப்பூதி அடிகள் நான்மறை கற்றார் – தன்வினை வாக்கியம்**
அப்பூதி அடிகள் நான்மறை கற்றாரா ? – வினா வாக்கியம்
அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார் – பிறவினை வாக்கியம்

**27. இலக்கணக் குறிப்புத் தருக : கங்கையும் சிந்துவும்**
A) உம்மைத்தொகை B) பெண்பால் பெயர்கள்
C) எண்ணும்மை D) அன்மொழித்தொகை

**விளக்கம் :** விடை (C)

கங்கை**யும்** சிந்து**வும்** – எண்ணும்மை
'உம்' விகுதி வெளிப்பட்டு வரும் சொற்கள் எண்ணும்மை ஆகும்.

**28. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம்**
A) மிகும் B) மிகாது
C) சில இடங்களில் வரும் D) சில இடங்களில் வராது

**விளக்கம் :** விடை (A)

சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.
(எ.கா) சால + பேசினான் - சாலப்பேசினான்
தவ + சிறிது - தவச்சிறிது

**29. தாழ்பூந்துறை – என்ற சொல்லுக்குரிய இலக்கண குறிப்பு தருக.**
A) ஏவல் வினைமுற்று B) உரிச்சொல் தொடர்
C) பண்புத்தொகை D) வினைத்தொகை

**விளக்கம் :** விடை (D)

தாழ்பூந்துறை – வினைத்தொகை
முக்காலத்திற்கும் பொருந்தும்படி விரிந்து பொருள் தருவன வினைத்தொகைகள் ஆகும். காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை ஆகும்.
தாழ் என்பது வினைப்பகுதி. பூந்துறை என்பது பெயர்ச்சொல் காலம் காட்டும் இடைநிலைகள் இப்பெயரெச்சத்தில் தொக்கி நிற்கின்றன.

| | | |
|---|---|---|
| தாழ்ந்த பூந்துறை | – | இறந்தகாலம் |
| தாழுகின்ற பூந்துறை | – | நிகழ்காலம் |
| தாழும் பூந்துறை | – | எதிர்காலம் |

**30. தென்னாப்பிரிக்க வரலாற்றில் யாருடைய பெயர் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.**
A) திலகவதி B) தில்லையாடி வள்ளியம்மை
C) ஜான்சிராணி D) நாகம்மை

**விளக்கம் :** விடை (B)

**தில்லையாடி வள்ளியம்மை :** தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் உரிமைக்காக காந்தியடிகளின் தலைமையில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். சிறையில் உடல்நலம் குன்றியதால் விடுதலை செய்யப்பட்ட இவர் தனது 16–ஆவது அகவையில் மரணமடைந்தார். இவரைப் பற்றி காந்தியடிகள் **தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம் என்னும் நூலில்** 'தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்' என்று எழுதியுள்ளார்.

**31. உலகம் உருண்டையானது என்பதைத் தம் தொலைநோக்கியால் கண்டறிந்து சொன்னவர் யார்?**
A) கலீலியோ B) நிகோலஸ்கிராப்ஸ்
C) சி.வி. இராமன் D) தாமஸ் ஆல்வா எடிசன்

விடை (A)

**32. தமிழுக்கு அரும்பணி ஆற்றிய அமெரிக்கப் பேராசிரியர்களில் ஒருவர்**
A) ஆறுமுக நாவலர் B) ஜோசப் கொன்ஸ்டான்
C) ஜேம்ஸ் பிராங்கா D) ஜி.யு. போப்

**விளக்கம் :** விடை (C)

**தமிழ்த் தொண்டாற்றிய அயல்நாட்டவர்**

| | | |
|---|---|---|
| ஆறுமுகநாவலர் | – | இலங்கை |
| கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி | – | இத்தாலி |
| ஜி.யு. போப் | – | கனடா நாட்டின் பிரின்ஸ் எட்வர்டு தீவு |
| ஜேம்ஸ் பிராங்கா | – | அமெரிக்க பேராசிரியர் |

**33. "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்று தன் கல்லறையில் எழுதச் சொன்னவர் யார் ?**
A) கால்டுவெல் B) ஜி.யு. போப்
C) வீரமாமுனிவர் D) ஷெல்லி

**விளக்கம் :** விடை (B)

**ஜி.யு. போப்பின் இறுதி விருப்பங்கள் :**
1. இறப்புக்குப் பின் தனது கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்ற வாசகம் இடம்பெற வேண்டும்.
2. தமது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையாக அமைய வேண்டும்.
3. தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தை தன்னை அடக்கம் செய்யும் போது கல்லறையில் உடன் வைக்க வேண்டும்.

இவருடைய மூன்று விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டன. இவருடைய இரண்டாவது விருப்பத்தை நிறைவேற்ற, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்த செல்வக்கேசவராயர் தமிழன்பர்களிடம் நன்கொடை திரட்டி இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார்.

**34. சித்தர்களில் ஆதி சித்தராக கருதப்படுபவர் யார் ?**
A) பாம்பாட்டிச் சித்தர் B) திருமூலர்
C) போகர் D) கோரக்கர்

**விளக்கம் :** விடை (B)

சித்தர்களில் ஆதி சித்தராகக் கருதப்படுபவர் திருமூலர். இவர் இயற்றிய திருமந்திரம் பன்னிரு திருமுறைகளுள் 10–ஆவது திருமுறையாக அமைந்துள்ளது.



Click Here to Learn more : https://bit.ly/3xNiQ28

Click Here to Learn more : https://bit.ly/3xNiQ28



**35. 'லிட்டன் பிரபு' எழுதிய 'இரகசிய வழி' என்ற நூலைத் தழுவி வெளிவந்த நூல்**

A) மனோன்மணீயம் B) அகத்தியம்
C) முறுவல் D) குணநூல்

**விளக்கம் :** **விடை (A)**

பெ. சுந்தரனார் அவர்கள் இயற்றிய நூல் மனோன்மணீயம் ஆகும். இது பாண்டிய நாட்டு மன்னனாகிய சீவக வழுதியின் மகள் மனோன்மணியின் வரலாற்றைக் கூறும் நாடக நூலாகும். இந்நாடகம் லிட்டன் பிரபு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய **'இரகசிய வழி'** என்ற நூலைத் தழுவி இயற்றப்பட்டது.

இது வழிநூலாயினும் 'முதல் நூல்' என்று கூறத்தக்க அளவு சிறப்புடையது. இந்நூலின் இடையே **'சிவகாமி சரிதம்'** என்ற துணைக்கதை ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இந்நூலில் 5 அங்கங்கள் மற்றும் 20 காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

**36. மனோன்மணியத்தை இயற்றியவர்**

A) சுந்தரம் பிள்ளை B) சுந்தர முனிவர்
C) சுந்தரர் D) சுந்தர மூர்த்தி

**விடை (A)**

**37. செங்கீரைப் பருவம் – பிள்ளைத்தமிழில் எந்தப் பருவமாக விளங்குகிறது ?**

A) இரண்டாம் பருவம் B) ஐந்தாம் பருவம்
C) முதற் பருவம் D) மூன்றாம் பருவம்

**விளக்கம் :** **விடை (A)**

**பிள்ளைத்தமிழ் பருவங்கள் :**

| | |
|---|---|
| 3–ஆம் திங்கள் | காப்பு |
| 5–ஆம் திங்கள் | செங்கீரை |
| 7–ஆம் திங்கள் | தால் |
| 9–ஆம் திங்கள் | சப்பாணி |
| 11–ஆம் திங்கள் | முத்தம் |
| 13–ஆம் திங்கள் | வருகை |
| 15–ஆம் திங்கள் | அம்புலி |
| 17–ஆம் திங்கள் | சிற்றில் (ஆண்பால்) கழங்கு (பெண்பால்) |
| 19–ஆம் திங்கள் | சிறுபறை (ஆண்பால்) அம்மானை (பெண்பால்) |
| 21–ஆம் திங்கள் | சிறுதேர் (ஆண்பால்) ஊசல் (பெண்பால்) |

**38. வேய்புரை தோள் என்ற உவமைத் தொடருக்கு பொருள் தருக.**

A) தென்னை போன்ற தோள் B) பளிங்கு போன்ற தோள்
C) மூங்கில் போன்ற தோள் D) வாழை போன்ற தோள்

**விளக்கம் :** **விடை (C)**

'வேய்' என்றால் மூங்கில் என்பது பொருளாகும். வேய்புரை தோள் என்றால் 'மூங்கில் போன்ற தோள்' என்பது பொருளாகும்.

**39. பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.**

A) எழிலரசி சிலப்பதிகாரம் கற்றாள்.
B) எழிலரசியால் சிலப்பதிகாரம் கற்பிக்கப்பட்டது.
C) எழிலரசி சிலப்பதிகாரம் கல்லாள்
D) எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள்

**விளக்கம் :** **விடை (D)**

| | |
|---|---|
| எழிலரசி சிலப்பதிகாரம் | தன்வினை |
| எழிலரசியால் சிலப்பதிகாரம் கற்பிக்கப்பட்டது | செயப்பாட்டு வினை |
| எழிலரசி சிலப்பதிகாரம் கல்லாள் | எதிர்மறைத் தொடர் |
| எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள் | பிறவினை |

**40. தாய்மொழியை உயிராகப் போற்றுமாறு ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார் – பொருத்தமான வாக்கியத்தை தேர்ந்தெடுக்க.**

A) அயற்கூற்று வாக்கியம் B) நேர்க்கூற்று வாக்கியம்
C) கலவை வாக்கியம் D) எதிர்மறை வாக்கியம்

**விளக்கம் :** **விடை (A)**

அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா. இதில் தன்மை முன்னிலைப் பெயர்கள் படர்க்கைப் பெயர்களாக மாறும்.

**அயற்கூற்று :** தாய்மொழியை உயிராகப் போற்றுமாறு ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார்.

**நேர்க்கூற்று :** "தாய்மொழியை உயிராகப் போற்ற வேண்டும்" என்று ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார்.

**41. பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்**

A) தன்வினை வாக்கியம்
B) செய்வினை வாக்கியம்
C) பிறவினை வாக்கியம்
D) செயப்பாட்டுவினை வாக்கியம்

**விளக்கம் :** **விடை (C)**

பாத்திமா திருக்குறள் கற்பித்தாள் – பிறவினை வாக்கியம்
பாத்திமா திருக்குறள் கற்றாள் – தன்வினை வாக்கியம்

**42. தவறான இணை எது ?**

A) மணித்தக்காளி - வாய்ப்புண்
B) முசுமுசுக்கை வேர் - இருமல்
C) அகத்திக் கீரை - கண்நோய்
D) வேப்பங்கொழுந்து - மார்புச்சளி

**விளக்கம் :** **விடை (C)**

அகத்திக்கீரை, பல்சார்ந்த நோய்களைக் குணமாக்குகிறது.

**43. பொருந்தாத இணை எது**

A) மேற்கு மலையில் இருந்து வந்தவை - சந்தனம், ஆரம்
B) கீழ்க்கடலில் விளைந்தவை - பவளம்
C) வடமலையில் இருந்து வந்தவை - கறி (மிளகு)
D) தென்கடலில் இருந்து கிடைத்தவை - முத்து

**விளக்கம் :** **விடை (C)**

வடமலையில் இருந்து வந்தவை மெருகிடப்பட்ட பொன், மாணிக்கக் கற்கள். உள் நாட்டில் இருந்து தரை வழி வந்தவை கறி (மிளகு)

**44. அகர வரிசைப்படுத்துக.**

A) மிளகு, மருங்கை, முசிறி, மூதூர், மேற்குமலை
B) முசிறி, மூதூர், மிளகு, மேற்குமலை, மருங்கை
C) மருங்கை, மிளகு, முசிறி, மூதூர், மேற்குமலை
D) மருங்கை, முசிறி, மூதூர், மிளகு, மேற்குமலை

**விடை (C)**

**45. தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர் யார் ?**

A) இராணி மங்கம்மாள் B) தில்லையாடி வள்ளியம்மை
C) ஜான்சி ராணி D) வேலுநாச்சியார்

**விளக்கம் :** **விடை (A)**

மதுரையை ஆட்சி செய்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள். கணவர் இறந்தவுடன் இவர் காப்பாட்சியாளராக இருந்து மதுரையை ஆட்சி செய்து வந்தார். மகன் முத்து வீரப்பன் பதவிக்கு வந்ததும் அரியணையைத் துறந்தார். ஏழாண்டுகள் ஆட்சி செய்த முத்துவீரப்பன் இறந்து விடவே, தன் பேரன் ஆட்சிக்கு வரும்வரை மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர், தன் ஆட்சிக் காலத்தில் திருவிதாங்கூர் போர், தஞ்சைப் போர், மைசூர் போர் ஆகிய மூன்று போர்களை எதிர்கொண்டு, வெற்றியடைந்தார்.



Click Here to Learn more : https://bit.ly/3xNiQ28